# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரண கூட்டம்

### 2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.

---

**பொருள்.1**

செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அவர்களின் 6/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 856 நாள் 30.08.2019**

ஆணையரின் நாட்குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

**பொருள்.2**

செங்கல்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களின் 6/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**தீர்மான எண். 857 நாள் 30.08.2019**

பொறியாளரின் நாட்குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

**பொருள்.3**

நகராட்சி அலுவலகம் (ம) குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் (14S) No 166 நாள்.23.11.2016–ல் இந்நகராட்சிக்குட்பட்ட அரசு / நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள் சுத்தம் செய்ய வேண்டி தனியார் மூலம் பராமரித்தல். அதற்கான செலவினம் ஆட்கள் நியமனம் இப்பணிக்கான பொருட்கள் வழங்குதல் ஆகியன கடந்த வருடம் 24 ஆகஸ்டு 2018–23 August 2019 வரை நிலையான FACILITY PVT Ltd நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிலையில் இப்பணியில் எவ்வித தொய்வும் இன்றி அவர்கள் இப்பணியை மேற்கொண்டுள்ளமையால் மேலும் ஒரு வருடம் அவர்களுக்கு அதே முறைகளின்படி இந்நகராட்சிக்குட்பட்ட 5 பள்ளிகளில் (ஏற்கனவே பராமரிக்கப்படும்) உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்யவும், பள்ளியினை தூய்மைபடுத்தவும் 15 பணியாளர்கள் மூலம் இப்பணியினை மேலும் ஒரு வருடம் செய்யவும் இந்த ஒப்பந்தத்தை நீட்டிக்க மன்றத்தின் அனுமதியும் மேற்படியான செலவினத்தை தொகையை கல்வி நிதியிலிருந்து வழங்கவும் தோராய செலவினம் ரூ.25,00,000 க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3388/17/எச்1)

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 858 நாள் 30.08.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.4**

செங்கல்பட்டு நகராட்சி உரகிடங்கு பகுதியில் உள்ள குப்பைகளை Prociain இயந்திரம் உரகிடங்கு பகுதியிலேயே ஒதுக்க ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி உரகிடங்கு பகுதியில் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட மன்றம் அனுமதிக்கவும்

**தீர்மான எண். 859 நாள் 30.08.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள்.5**

செங்கல்பட்டு நகராட்சி 1 மின் கம்பியாளர் (Wire man) மற்றும் 1 மின்கம்பி உதவியாளர் (Wire man helper) ஆகியோர் மட்டும் தற்பொழுது பணிபுரிந்து வருகிறார்கள். இந்நகராட்சியின் 1 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்ய போதுமான பணியாளர்கள் இல்லாததால் கடந்த 01.09.2018 முதல் 31.08.2019 வரை 7 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை M/S AMR Elecrical Engineering Contractor ந.ம.தி.எண்.564 நாள்.31.08.2018 ன் அனுமதி பெறப்பட்டதில் M/S AMR Elecrical Engineering Contractor என்ற தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்து, தற்பொழுது 31.08.2019 மேற்படி பணி உத்தரவு காலாவதியாவதால், புதிய ஒப்பந்தப்புள்ளி கோர மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக அனுமதி கோர வேண்டிய ஏற்படும் கால அவகாசத்திற்கு இப்பணிக்கான பணி உத்தரவு மூன்று மாத காலத்திற்கு 01.09.2019 முதல் 30.11.2019 வரை நீட்டிப்பு செய்யவும் ஏற்கனவே நகர மன்றம் அனுமதி அளித்துள்ள ஒப்பந்தாரர் திரு.AMC Electional Contractor மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விதிதத்தில் பணிமேற்கொள்ள மூன்று மாத காலத்திற்கு தோராய செலவினம் ரூ.12.60/– இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.446/2016/இ2, நாள்.08.082019)

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மன்றத்தின் அனுமதியை எதிர்கொண்டு பொது நிதியிருந்து பணி மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 860 நாள் 30.08.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர்/ ஆணையர்**
**செங்கல்பட்டு நகராட்சி**